Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

Nallur Branch Library

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆடி 23    [ 07-08-1993 ]    சனிக்கிழமை    ஓசை 170

## மண்ணெண்ணெய் அனுப்புவதில் அரசாங்கம் அசமந்தம்

யாழ். அரசாங்க அதிபருக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இடம்பெற்ற பேச்சை அடுத்து யாழ். குடாநாட்டிற்கு மாதம் ஒன்றிற்கு 5000 பரல் மண்ணெண்ணெய் கப்பலில் அனுப்பி வைக்கப்படும் என அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. அரசின் வாக்குறுதி முதல் மாதத்திலேயே நிறைவேற்றப்படவில்லை. இவ்வாறு யாழ். அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த வாக்குறுதி மீறலுக்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. குறைந்தளவிலான மண்ணெண்ணெய் கப்பலில் அனுப்பிவைப்பது சம்பந்தமாக அரசாங்கஅதிபர் கொழும்பில் பேச்சுநடத்தியபோதும் பலன்ஏதும் கிட்டவில்லை. மார்ச்மாதத்தில்மட்டும் 4022 பரல் மண்ணெண்ணெய் அனுப்பிவைக்கப்பட்டது. அதன் பின் வந்த மாதங்களில் மிகக்குறைந்தளவிலான பரல்களே அனுப்பிவைக்கப்பட்டன.

### யுத்த கைதிகள் விவகாரம்

# முன்னேற்றகரமான திட்டமின்றி அரச அதிபர் யாழ். திரும்பினார்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து விசேட விமானத்தின் மூலம் நேற்று யாழ். திரும்பிய அரச அதிபர் மாணிக்கவாசகர் உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக்கைதிகளின் விடுதலை தொடர்பாக முன்னேற்றகரமான யோசனை எதையும் கொண்டுவரவில்லை என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

திட்டமிட்டபடி இன்று யாழ். திரும்புவதாக இருந்த யாழ் அரசாங்கஅதிபர் விசேட விமானத்தின் மூலம் நேற்றே யாழ். வந்து சேர்ந்தார். ஆயினும் கைதிகள் விவகாரத்தைப் பொறுத்து அவர் வெறுங்கையுடனேயே திரும்பியுள்ளதாகவும், கைதிகள் விவகாரத்தில் அரசாங்கம் பெரும் அக்கறை காட்டியதாக தெரியவில்லை எனவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணம் திரும்பிய அரச அதிபர் தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்களை நேற்று மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதற்கு முன்னதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் தங்கியிருந்த வேளை கைதிகள் விடுதலை தொடர்பாக கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வன சிங்காவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அரசின் யோசனைகளுடன் யாழ். அரச அதிபர் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் எனவே உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி யுத்தக்கைதிகளை கூட்டுப்படை தலைமைத் தளபதி கேட்டுக்கொண்டதை அடுத்து யுத்தக்கைதிகள் நீராகாரம் அருந்தி உண்ணாவிரதத்தை தொடர்ந்தது தெரிந்ததே.

## இனியும் தொடர்ந்து ஏமாற நாங்கள் தயாராக இல்லை

### போர்க் கைதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதப் போராட்ட ...

இம் முறையும் அரசு எம்மை ...

## கிழக்கில் தாக்குதல் நடத்த புலிகள் திட்டமாம்

(கொழும்பு)

கிழக்கில் விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடதத திட்டமிடுவதாக கிடைத்த புலனாய்வுத் தகவல்களையடுத்து இப் பகுதி படையினர் உஷார் படுத்தப்பட்டிருப்பதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மணலாற்றில் விடுதலைப் புலிகள் கடந்த மாத இறுதியில் பெற்ற வெற்றியை அடுத்து அவர்களது கவனம் கிழக்கிற்கு திரும்பியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்பொருட்டு புலிகள் தமது சில பிரிவுகளை கிழக்கிற்கு நகர்த்தியுள்ளதாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## வவுனியா வடபகுதியில் இராணுவத் தயாரிப்பு

(வவுனியா)

வடக்கு வவுனியா பகுதியில் இருந்து முன்னேற்ற முயற்சிகளுக்கு இராணுவம் ஆயத்தங்களை செய்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவிலுள்ள தனியார் வர்த்தகர்களிடம் இருந்து படையினர் லொறிகளை எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## வெற்றுப்பீப்பா மீளப்பெற கூட்டுப்படை தடை

[யாழ்ப்பாணம்]

வெற்றுப் பீப்பாக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்கவில்லை. இத ... பிட்ட அளவிற்கு மண்ணெண்ணெய் அனுப்பி வைக்காததிற்கு வெற்றுப் பீப்பாக்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது தெரி ...

## இருதயத்தினுள் கத்தி; பிடியிலிருந்து நழுவியதாம்

### மரண விசாரணையில் சாட்சியம்

[கொழும்பு]

நோயாளியின் இருதயத்தை சத்திர சிகிச்சை செய்தவேளை கத்தி பிடியிலிருந்து கழன்று போயிருந்தது. இதனைசத்திர சிகிச்சையின் போது எனக்கு உதவிய டாக்டர் தெரிவித்தார். கத்தியை தேடிய போதிலும் அது பயனளிக்கவில்லை. நோயாளியை எக்ஸ்ரே எடுத்த போது உடலில் கத்திஇருப்பது தெரிந்தது இதனால் அவரை மீண்டும் சத்திரசிகிச்சைசெய்ய வேண்டியிருந்தது. இவ்வாறு சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு ஆஸ்பத்திரியில் இருதய சிகிச்சையின் போது டாக்டர்கள் தவறுதலாக அவரின் இருதயத்தினுள் அறுவைக்கத்தியைவைத்துதைத்து விட்டதால் மரணமடைந்த யாழ் ஆனைக்கோட்டை வாசியான பிரான்சிஸ் செல்வநாதன்[30] என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

"காலஞ்சென்றவர் யாழ். ஆஸ்பத்திரியில் இருந்தே

[4ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு விடுதிகளில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, கிராண்ட்பாஸ் பகுதி விடுதிகளில் இருந்து கடந்த செவ்வாய் பல வடபகுதி இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

நவரத்தினசிங்கம் மோகன் சிங்கம் (ஊர்காவற்றுறை), தருமலிங்கம் அருணகிரிநாதன் (ஊர்காவற்றுறை), சிவராசா தேவானந்தன் (யாழ். பெருமாள் கோவிலடி), சுப்பிரமணியம் உதயகுமார் (கொக்குவில்), திருநாவுக்கரசு சிவகுமார் (நயினாதீவு), குமாரசிங்கம் ராஜேந்திரன் (திருநெல்வேலி) ஆகியோரும் கைதானவர்களில் அடங்குவர்.

## வவுனியா நகருக்குள் நுழைவதற்கு பாஸ்

[வவுனியா]

தென்பகுதியிலிருந்து வடக்கு செல்வதற்காக வவுனியா வரை ரயிலில் வரும் பயணிகள் வவுனியா நகரப் பகுதிக்குள் நுழையும்போது படையினரின் பாஸ் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பாஸ் இல்லாதவர்கள் குறிப்பாக யாழ்தேவி ரயிலிலும், இரவு தபால் ரயிலிலும் பயணம் செய்து தாண்டிக்குளத்தில் இறங்குபவர்கள் தாண்டிக்குளம் முகாமைக் கடக்க அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த புதிய நடைமுறை சுமார் ஒருவாரகாலமாக படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### அத்தியாவசிய சேவைகள் குறித்து

## ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பாகவும் விநியோகம் தொடர் ...

மணலாற்றில் விடுதலைப் புலிகள் கடந்த மாத இறுதியில் ... கோள்காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## வவுனியா வடபகுதியில் இராணுவத் தயாரிப்பு

(வவுனியா)

வடக்கு வவுனியா பகுதியில் இருந்து முன்னேற்ற முயற்சிகளுக்கு இராணுவம் ஆயத்தங்களை செய்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவிலுள்ள தனியார் வர்த்தகர்களிடம் இருந்து படையினர் லொறிகளை எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## வெற்றுப்பீப்பா மீளப்பெற கூட்டுப்படை தடை

[யாழ்ப்பாணம்]

வெற்றுப் பீப்பாக்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கு கூட்டுப்படை தலைமையகம் அனுமதி வழங்கவில்லை. இதனாலேயே மண்ணெண்ணெய் நிரப்பி வரும் பீப்பாக்களை திரும்ப அனுப்பி வைக்க முடியாமல் உள்ளது என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா அரசாங்கம் குறிப்பிட்ட அளவிற்கு மண்ணெண்ணெய் அனுப்பி வைக்காததிற்கு வெற்றுப் பீப்பாக்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

வெற்றுப் பீப்பாக்களை மீளப் பெற்று கப்பலில் ஏற்றிச் செல்வதற்கு கப்பல் கொம்பனியும் பின் நிற்கின்றது என தெரிவிக்கப்பட்டது.

[தி].[பா]

## கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்; தெரிவுக்குழு கோரும்?

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும்படி அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யலாம் எனத் தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பை நடத்தும்படி சிபார்சு செய்யலாம் என ஆலோசிக்கப்பட்ட போதும் பின்னர் அது கைவிடப்பட்டு உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த முற்படுவதன் மூலம் கிழக்கு மாகாணத்திற்கான அரசியல் தலைமை ஒன்றை உருவாக்க முயற்சிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இங்கு 1988 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கிராம மட்டத்தில் தேர்தல் எதுவும் நடைபெறவில்லை என சுட்டிக்காட்டப்படுவதுடன், மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வைத் தோற்றுவிக்கவும் இது உதவும் என்று கருதப்படுகிறதாம்,

## எழுதுவினைஞர் நியமனம் விரைவில் கிடைக்கும்

அரச அதிபர் தகவல்

[யாழ்ப்பாணம்]

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு மிகவிரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு கொழும்பு சென்று திரும்பிய யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற மேற்படி போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு விகிதாசார அடிப்படை

[4ஆம் பக்கம் பார்க்க]

## காமினி-ஐ.தே.க. இணைவு பெரும்பாலும் நிச்சயமாம்

[கொழும்பு]

ஐ.தே.க, ஜ.ஐ.தே. முன்னணி ஆகியன இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைப்பது பெரும்பாலும் உறுதியாகி விட்டதாக ஐ.தே.க. காரியதரிசி சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியையும் மற்றும்சில கட்சிகளையும் இணைத்து தேசிய அரசுஒன்றை அமைக்கும்முயற்சியில் சில அரசியல் வாதிகள் தீவிர அக்கறை செலுத்திவருவது தெரிந்ததே.

இவ் இணைப்பு குறித்த

[4ஆம் பக்கம் பார்க்க]

னும் கைதிகள் விவகாரத்தைப் பொறுத்து அவர் வெறுங்கையுடனேயே திரும்பியுள்ளதாகவும், கைதிகள் விவகாரத்தில் அரசாங்கம் பெரும் அக்கறை காட்டியதாக தெரியவில்லை எனவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

... வார்த்தை நடத்தினார்.

இதற்கு முன்னதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் தங்கியிருந்த வேளை கைதிகள் விடுதலை தொடர்பாக கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வன சிங்காவுடன் ...

... எனவே உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி யுத்தக்கைதிகளை கூட்டுப்படை தலைமைத் தளபதி கேட்டுக்கொண்டதை அடுத்து யுத்தக்கைதிகள் நீராகாரம் அருந்தி உண்ணாவிரதத்தை தொடர்ந்தது தெரிந்ததே.

# இனியும் தொடர்ந்து ஏமாற நாங்கள் தயாராக இல்லை

## போர்க் கைதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"மற்றுமொரு உண்ணாவிரதப் போராட்டத்துக்கு நாம் தயாராக இல்லை. அத்தகைய போராட்டத்துக்கு எமது உடல் நிலையும் இடம்கொடுக்காது. நாம் உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளோம் அரசு எம்மைத் தொடர்ந்தும் ஏமாற்றமுடியாது" இவ்வாறு இன்றுடன் பத்தாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தக்கைதிகள் நேற்று மாலை எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; அரசு எம்மை ஏமாற்ற முயற்சித்ததன் காரணமாக நாம் இரண்டாவது தடவையும் உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இம் முறையும் அரசு எம்மை ஏமாற்ற முயற்சிக்க முடியாது. நாம் ஏமாறவும் தயாராக இல்லை. இந்தத்தடவை நாம் எவரது உறுதி மொழிகளையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். நாம் அனைவரும் விடுதலையாகும் வரை எமது உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(க),(சி)

# மாகாண பாதுகாப்பு குறித்து கொழும்பில் அவசர மாநாடு

வடமத்திய மாகாணத்தின் பாதுகாப்பு குறித்தான அவசர மாநாடு ஒன்று கடந்த வாரத்தில் முதலமைச்சர் ஜி. டி. மஹிந்தசோம தலைமையில் நடைபெற்றுள்ளது.

இம் மாநாட்டைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வடமத்திய மாகாண சுகாதார அமைச்சர் ஜயசேன திசாநாயக்க மேலும் கூறுகையில் மணலாறு மண் கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதலின் பின்னர் வில்பத்து மற்றும் மகாவிலாச்சிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் இருப்பது பற்றிய தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட முப்படைத் தளபதிகளையும் அழைத்து மாகாணத்தில்பாதுகாப்பு நிலைமை தொடர்பாக ஆராயப்பட இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# எம். ஐ-8 ஹெலிக்கப்டர்கள் மேலும் மூன்று கொள்வனவு

(கொழும்பு)

ரஷ்ய தயாரிப்பான மூன்று எம். ஐ-8 ரகப் போக்குவரத்துக் ஹெலிக்கப்டர்களை கொள்வனவு செய்வதற்கான அனுமதியை அரசு வழங்க உள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த வருட இறுதிக்குள் ஹெலிக்கப்டர்கள் கொள்வனவு செய்யப்படும் என்று அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இவ்வருட ஆரம்பத்தில் சிறிலங்கா விமானப் படை மூன்று எம். ஐ-8 ரக ஹெலிக்கப்டர்களைக் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தியுள்ளது. ஹெலிக்கப்டர்கள் வடக்கு-கிழக்குப் போர்முனைக்கு யுத்த தளபாடங்கள் மற்றும் படையினரை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மூன்று ஹெலிக்கப்டர்களையும் அரசு 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் விலையில் கொள்வனவு செய்தது.

விமானப் படை, முதலில் அமெரிக்கத் தயாரிப்பான பெல்-212 மற்றும் பெல்-412 ரகக் ஹெலிக்கப்டர்களையே போக்குவரத்துக்குப் பாவித்து வந்தது. விமானப் படை அதன் சேவைக்குப் பாவித்த முதல் ரஷ்ய ரக விமானம் எம். ஐ-8என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் வருடம் விமானப் படை ஆர்ஜன்டீனா தயாரிப்பான நான்கு எவ்.ஏ.எம்.ஏ. ஐ.ஏ 58 ஏ விமானங்களையும் கொள்வனவு செய்தது. இந்த விமானங்களின் பெறுமதி இலங்கைப் பணத்தில் 484,000,000 ரூபாவாகும்.

## வவுனியா நகருக்குள் நுழைவதற்கு பாஸ்

[வவுனியா]

தென்பகுதியிலிருந்து வடக்கு செல்வதற்காக வவுனியா வரை ரயிலில் வரும் பயணிகள் வவுனியா நகரப் பகுதிக்குள் நுழையும்போது படையினரின் பாஸ் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பாஸ் இல்லாதவர்கள் குறிப்பாக யாழ்தேவி ரயிலிலும், இரவு தபால் ரயிலிலும் பயணம் செய்து தாண்டிக்குளத்தில் இறங்குபவர்கள் தாண்டிக்குளம் முகாமைக் கடக்க அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த புதிய நடைமுறை சுமார் ஒருவாரகாலமாக படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது;

## அத்தியாவசிய சேவைகள் குறித்து ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு அரச அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் அத்தியாவசிய சேவைகள் குறித்து யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். குடாநாட்டு மக்களுக்காக கப்பல் மூலம் எடுத்துவரப்படும் அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பாகவும் விநியோகம் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

மேலும் குடாநாட்டு மக்கள் தற்போது எதிர்நோக்கிவரும் போக்குவரத்துப் பிரச்சினை விலைவாசி உயர்வு போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அரச அதிபர் ஜனாதி

[4ஆம் பக்கம் பார்க்க]

## காமினி கட்சியில் அநுரா? ஆதரவாளர் முயற்சி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் அநுரா பண்டாரநாயக்காவை சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்கா கட்சிக கட்டுப்பாடுகளை மீறியதாக குற்றஞ்சாட்டி கட்சித் தலைமைப்பீடம் அவரை கட்சியிலிருந்து இடை நிறுத்தியது தெரிந்ததே.

காமினி திஸாநாயகா கட்சியின் சில முக்கியஸ்தர்கள் இவரை தமது கட்சியில் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அநுரா பண்டாரநாயக்கா கட்சியின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் இது தொடர்பான முடிவு எதனையும் அநுராபண்டாரநாயக்கா எடுக்கவில்லை எனவும் அவர் தனது எதிர்கால அரசியல் நிலைப்பாடு குறித்து விரைவில் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கப்பலில் வரும் அளவு பட்டியலிலும் குறைவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு ஏற்றிவரப்படும் பொருள்கள் பற்றிய விபரம் முதலில் மிகைப்படுத்தப்பட்டே அனுப்பிவைக்கப்படுகிறது.

கொழும்பு துறைமுகத்தில் கப்பலில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் ஆரம்பமாகும் போது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் மிகைப்படுத்தப்பட்ட அளவிலேயே பொருள்களின் விபரங்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

பொருள்களை ஏற்றிக் கொண்டு குறிப்பிட்ட கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும்போதே பொருள்களின் சரியான தொகை தெரியவருகிறது.

கப்பலில் ஏற்றப்படும் போது ஏற்படும் இடவசதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## படகுச்சேவை இன்றுஇல்லை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று முன்னர் அறிவிக்கப்பட்டபடி நடைபெற மாட்டாதுஎன யாழ்.மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

Nallur Branch Library

# வரி விளம்பரம்

### சேவல் குஞ்சுகள்

ஒன்றரை மாத பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்னைக்குண்டு. விறாத்துக் குஞ்சுகளும் பெற்றுக் கொள்ளலாம். 1010/9. கே. கே. எஸ் வீதி (நாச்சிமார் கோவிலடி) யாழ்ப்பாணம். (5630)

### ஶ்ரீகாந்த்புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள் இலங்கை வெளியீடுகள் ஆங்கில தமிழ் சொற் களஞ்சியம், (மற்றாஸ் டிக்செனெறி) சீவம் இன்டஸ்றீஸ் வெளியீடுகளும், அருள் உரை ஆகியவை. நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஶ்ரீ காந்தி புத்தகசாலை நல்லூர்
(சி 7134)

### சலனம்

சென்னைபிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (5592)

### றேடியோ, மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

சுவண்டிங்கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள 125/- எலெக்ரோனிக் கடிகாரங்கள் 90/, 150/-மேசை சுவர்பணிக்கூடுகள் 100 200/- றேடியோமட்டும் 150/- கசற் றேடியோ— 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (சி 7113)

### வகுப்பு (ஆண்டு 6)

ஆண்டு 3ற்கு அனுபவமுள்ள ஆசிரியர்களால் சகல பாடங்களும் கற்பிக்கப்படும் புலமைப் பரிசில் (1995)ற்கு ஏற்ப தமிழ் கணிதம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். வகுப்பு ஆரம்பம் 07-08-93 சனி 1-30. இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (5634)

### வினாத்தாள் (ஆண்டு 4, 5)

ஆண்டு 4 புலமைப் பரிசில் (1994) மாதிரி வினாத்தாள் 07 08 93 சனி வெளியிடப்படும். ஆண்டு 5 புலமைப் பரிசில் (1993) மாதிரி வினாத்தாள் 08-08-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5533)

### வேப்பம் விதை

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூ 6/- நன்றாகக் காய்ந்த வேப்பம் பழக்கோது கிலோ ரூ 2/- வாங்குகிறோம் அண்ணா கோப்பிக் கடைகளிலும் கொடுக்கலாம்.
''மில்க்வைற்''
(சி-7153)

### ஓராண்டு நிறைவு சிறப்பு நிகழ்ச்சிகள்

நவா கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு தீவக கோட்ட விடுதலைபுலிகள் மாணவரமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள் இன்று யாழ் புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சிகளில் விடுதலைப்புலிகள் இயக்க முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகளும் தீவகக் கோட்ட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் உரும்பராய்ச் சந்திக்கும் மருதனார் மடம் சந்திக்குமிடையில் கைச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு சுன்னாகம் காவல்பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இலக்கம் 37, மலர் மகள் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகமணி தில்லையம்பலம் என்பவராலேயே இது கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி சுன்னாகம் காவல் பணிமனையில் இதனை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தி)

Basic English
General English
O/L English

புதிய வகுப்புக்கள் 09 08 1993 அன்று காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகின்றன. கிழமை நாட்களிலும், வார இறுதி நாட்களிலும்.

தொடர்புகட்கு:
K சபாநாயகம்,
4, பிள்ளையார் ஒழுங்கை,
இருநெல்வேலி.
(சி-7154)

## ஆட்சியை ஆதரிப்போரால் தமிழர் ஏமாற்றப்படுகின்றனர்

### குமார் பொன்னம்பலம் கவலை

யு. என். பி திட்டமிட்டுத் தமிழரைப் படுகொலை செய்த பத்தாவது ஆண்டை நாம் இன்று நினைவு கூருகிறோம். அதேவேளை, யு என். பி அரசுத் தலைவர் தான் இந்தக் கொலைகளுக்குத் திட்டமிட்டார் என்பதை அக்கட்சியின் தமிழரான இன்றைய பொருளாளர் ஒப்புக் கொள்கிறார் என்று ஜி ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சண்டே ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

தமிழர் இன்றும் யு. என். பி ஆட்சியை ஆதரிக்கிறார்கள். இதனால் தான் சிங்கள அரசியல் வாதிகளாலும், சிங்கள இனவாதிகளாலும் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு அலைக்கழிக்கப்படுகிறார்கள். இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. பயிராக்கவியல் / விவசாய உயிரியல் / விவசாய இரசாயனவியல் / விவசாயப் பொருளியல் / விவசாயப் பொறியியல் / மிருக விஞ்ஞானப் பேராசிரியர்.
2. விவசாய உயிரியலில் / மிருக விஞ்ஞானத்தில் / விவசாயப் பொருளியலில் / விவசாயப் பொறியியலில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதிகாண்) / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்).
3. பயிராக்கவியலில் / விவசாய உயிரியலில் / மிருக விஞ்ஞானத்தில் செய்முறை காட்டுநர்.

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென தலைவராலும் பீடத்தலைவராலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரை அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் ரூபா 5850—10x260—8450/- (மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத் திட்டத்தில் அவரை வைக்கவும் முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு [மேல் பிரிவு] டன் சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்], ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் [தகுதிகாண்] தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சம்பள அளவுத்திட்டம் 1994. 01. 01 இல் இருந்தே அமுல்படுத்தப்படும்

சம்பள அளவுத்திட்டம்:-

பேராசிரியர் — ரூபா 15860—6x390—18,200/- (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் I
ரூபா 12480—8x325—15080/- (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
ரூபா 10400—5x325—12025/- (மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 5850—10x260—8450/-

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
பாதிக்கப்பட்ட, உதவியற்ற பெண்கள் புனர்வாழ்வுக்கென நடைமுறைப்படுத்தும் உதவித்திட்டம்.

தர உத்தரவாதமும், சுத்த தயாரிப்புமான

## வறுத்த கைக்குத்து அரிசி மா

ஒரு கிலோ பைக்கெற்றுகளில்

**தற்போதைய விலை ஒரு கிலோ பக்கற் 40/-**

வியாபாரிகளுக்கும், மொத்தக் கொள்வனவுகளுக்கும் 2 வீதக் கழிவு கொடுக்கப்படும்.

தற்போதைய விற்பனை இடங்கள்:

1. 106, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
2. அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கட்டுடை அலுவலகம்
3. அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உரும்பராய் அலுவலகம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
(T. R. R O Ltd,)
106. 4-ம் குறுக்குத்தெரு,
(No. 106, 4th Cross Street)
யாழ்ப்பாணம்.
(JAFFNA.)
(சி-7145)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-08-07

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா - மன்னார்வீதி நெளுக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 10 தமிழர்கள். யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 14 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாமருகே எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 02 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் நாயாற்றுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**வேந்தன்** (சண்முகம் பவளராசா-நிலாவெளி-திருமலை)
**தீசன்** (வேலுப்பிள்ளை மகேஸ்வரன்-தம்பசிட்டி, அம்மன் கோவிலடி-பருத்தித்துறை)
**கர்ணன்** (சிவப்பிரகாசம் சிவகுமார் - சரசாலை தெற்கு, சாவகச்சேரி - யாழ்)
**ஜேம்ஸ்** [சிவசுப்பிரமணியம் மணிவர்மன் - சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை - யாழ்]

புலோலைக்கட்டுவனில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள். புத்தூரில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு யாழ் - நல்லூர்ப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

**பவி** [சுப்பிரமணியம் சிவராஜா - புற்றளை, புலோலி

## போசாக்கின்றி வாடுகிறீர்களா?
## தொழிலின்றி தவிக்கின்றீர்களா?

## தொடர்பு கொள்ளவும்

யாழ். மாவட்டத்தில் குழாய்க்கிணறு அடித்துக் கொடுப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் 06-08-93, 07-08-93, 8-08-93 ஆகிய தினங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
உட்கட்டுமானப்பகுதி
த. பொ மே. கழகம்,
இ. 03, செம்பியன் லேன்,
கொக்குவில்.
(சி-7144)

வகுப்பு (ஆண்டு 6)

ஆண்டு 3ற்கு அனுபவமுள்ள ஆசிரியர்களால் சகல பாடங்களும் கற்பிக்கப்படும் புலமைப் பரிசில் (1995)ற்கு ஏற்ப தமிழ் கணிதம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். வகுப்பு ஆரம்பம் 07-08-93 சனி 1-30. இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (5634)

---

அடித்துக் கொடுப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள் 06-08-93, 07-08-93, 8-08-93 ஆகிய தினங்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
உட்கட்டுமானப்பகுதி
த. பொ. மே. கழகம்,
இ. 03, செம்பியன் லேன்,
கொக்குவில்.

(சி-7144)

---

## போசாக்கின்றி வாடுகிறீர்களா?
## தொழிலின்றி தவிக்கின்றீர்களா?
## எதுவானாலும் இன்றே நாடுங்கள்

# காமதேனு
# விவசாய கால்நடைப் பண்ணை

உங்கள் அனைவரினதும்

**உணவுத்தேவைக்கான:**
- ★ இறைச்சிக் கோழிகள்
- ★ கோழி முட்டைகள்
- ★ தாரா முட்டைகள்
- ★ முயல்கள்
- ★ முயல் குட்டிகள்
- ★ பசுப்பால்

**சுயதொழில் வளர்ச்சிக்கான:**
- ★ ஒரு மாத, இரண்டு மாத வயதுடைய பேட்டுக்குஞ்சுகள்
- ★ நல்லின அடை முட்டைகள்
- ★ கால்நடை மருந்து வகைகள்
- ★ கால்நடை தீவனங்கள்
- ★ மரக்கன்றுகள்

**போன்றவை உங்கள் தேவைக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.**

அத்துடன் உங்கள் உற்பத்திப் பொருட்களாகிய எள்ளுப் பிண்ணாக்கு, சோளம், குரக்கன், கருவாடு, இறுங்கு, உவிடு, தேங்காய்ப்பிண்ணாக்கு என்பனவும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

மற்றும் நல்லின ஆடுகள் மூலம் இயற்கை முறைகளில் சினை படுத்தியும் கொடுக்கப்படுகின்றன.

தரமான நிலையில் மலிவானவிலையில் உங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்ளவும், உங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் இன்றே நாடுங்கள்.

# காமதேனு
# விவசாய கால்நடைப் பண்ணை,
## வெள்ளை வீதி,
## சுன்னாகம்.

(சி-7155)

---

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு [மேல் பிரிவு] டன் சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்], ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் [தகுதிகாண்] தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சம்பள அளவுத்திட்டம் 1994. 01. 01 இல் இருந்தே அமுல்படுத்தப்படும்

சம்பள அளவுத்திட்டம்:-

பேராசிரியர் — ரூபா 15860–6x390–18,200/- (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் I
ரூபா 12480–8x325–15080/- (மாதமொன்றுக்கு)

சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
ரூபா 10400–5x325–12025/- (மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 5850–10x260–8450/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 5070/- மாதமொன்றுக்கு (நிலையானது)

தற்காலிகச் செய்முறை காட்டுநர் ரூபா 4225/- மாதமொன்றுக்கு (நிலையானது)

குறிப்பு:-

1) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551 ஆம் இலக்க 1992 டிசெம்பர் 28ஆம் தேதிய சுற்று நிருபத்திற்கு ஏற்ப மேற்குறித்த சம்பள அளவுத் திட்டங்கள் 1994 சனவரி 1ஆம் தேதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.

2) இத்துடன் 1994 டிசெம்பர் 31-ம் தேதிவரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுதேதி 1993.10 29. இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு தேதி 1993. 09. 10

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துக்கும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் சிரேட்ட உதவிப்பதிவாளர் [தாபனங்கள்] அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/ ரூபா பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23x10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுதிட்டத்தில் பொருத்தமானபடியில் வைக்கப்படுவார்.

குறிப்பு:- ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்:
1993. 07. 30.

(சி 7147)

---

ணுவத்தினரின் முகாமருகே எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 02 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் நாயாற்றுப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**வேந்தன்** (சண்முகம் பவளராசா-நிலாவெளி-திருமலை)

**தீசன்** (வேலுப்பிள்ளை மகேஸ்வரன்-தம்பசிட்டி, அம்மன் கோவிலடி-பருத்தித்துறை)

**கர்ணன்** (சிவப்பிரகாசம் சிவகுமார் - சரசாலை தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**ஜேம்ஸ்** [சிவசுப்பிரமணியம் மணிவர்மன் - சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை - யாழ்]

புன்னாலைக்கட்டுவனில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள். புத்தூரில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு யாழ் - நல்லூர்ப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய -

**பவி** [சுப்பிரமணியம் சிவராஜா - புற்றளை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை - யாழ்]

அம்பாறை / திருக்கோயில், சங்கமான் கண்டிப்பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 47 தமிழர்கள்.

சமணங்குளத்தில் முஸ்லிம் குழுவொன்று மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

வவுனியா - கல்மடு சர்வோதய சிறுவர் பாடசாலை இடம்பெயர்ந்தோர் முகாம் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள். செட்டிகுளம் 10-ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துச் சுடுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

யாழ் - அத்தியடி அம்பலவாணர் வீதியிலிருந்த எமது முகாமொன்றின் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான -

**ராசன்** [செல்வரத்தினம் செல்வகுமார் - நாயன்மார்கட்டு - யாழ்ப்பாணம்]

**மாம்பழம்** [காசிலிங்கம் சிவபாலன் - நாயன்மார்கட்டு - யாழ்ப்பாணம்]

இதே பகுதி, இதை அண்டிய பகுதிகளை மற்றும் மானிப்பாய் மருத்துவமனை, திருநெல்வேலி பொதுச் சந்தை ஆகியவற்றின் மீது சிறிலங்கா விமானப் படை மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மாணவன் உட்பட 9 தமிழர்கள்-

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட தளவாய், ஐயங்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழிளைஞர்கள்.

1991ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய –

**தீசா** [சிவபாதலிங்கம் சிறீதரன் - இரணை இலுப்பைக் குளம் - வவுனியா]

**கிருணா** [குப்புச்சாமி மூர்த்தி - 3-ம் வாய்க்கால், பரந்தன் - கிளிநொச்சி]

**குணேஸ்** [கறுப்பையா திவாகரன் - தலைமன்னார் துறைமுகம் - மன்னார்]

**மேஜர் ஜொனி** [நாகநாதி ஜெகதீஸ்வரன் - மீசாலை வடக்கு, சாவகச்சேரி - யாழ்]

1992ஆம் ஆண்டு திருமலை - மூதூர் கதியால் சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்-

**புண்ணியம்** [பாலசிங்கம் - பூநகர், ஈச்சிலம்பத்தை - திருமலை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7151)

### சிந்தனைக்கு

என் ஒழுக்கத்தை நான் காத்துக் கொண்டால், என் நற்பெயர், தன்னைத்தானே காத்துக் கொள்ளும்.

— ட்வைட் எல். மூட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## சமாதானத்திற்கு முட்டுக்கட்டை எது?

விடுதலைப் புலிகளின் விடாப்பிடித்தனமான போக்குத்தான் இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கிய அரசாங்கத்தின் முயற்சியில் பெரும் பிரச்சினையாகும் என்று சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார். அமைச்சரின் இப்பேச்சானது தனது உரிமையைப் பறிகொடுத்தவரிடம், 'அது ஏன் உனக்கு, அதை என்னிடம் கொடுத்துவிடு' எனக் கோருவதற்கு ஒப்பானதாகும்.

விட்டுக் கொடுப்பும், சமரசமும் யாருக்குரியன. ஆக்கிரமித்தவர்களும், அபகரித்தவர்களுமே விட்டுக்கொடுக்க வேண்டியவர்கள். அதுவே விட்டுக்கொடுப்பு என்பதற்கு சரியான விளக்கமும் ஆகும். உரிமையும், உடைமையும் இழந்தவர்கள் விட்டுக்கொடுப்பது என்பது எஜமானதனத்தை ஏற்றுக்கொள்வதாகவும், அடிமைத்தனத்தை ஒப்புக்கொள்வதுமாகும்.

அதாவது, விடுதலைப் புலிகள் போராடுவது தமிழரின் ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை மீட்பதற்கும், இழந்த உரிமைகளைப் பெறுவதற்கும் ஆகும். இதில்தான் தமிழரின் சுதந்திரமும், பாதுகாப்பும் தங்கியுள்ளது. இதில் எதை விட்டுக்கொடுப்பது? தமிழரின் தாயகத்தையா? அன்றிப் பாதுகாப்பையா? அல்லது சுதந்திரமான வாழ்வையா? இதில் எதை விட்டுக்கொடுப்பினும் அது தமிழரின் அடிமைச் சாசனமாகவே இருக்கும்.

மேலும் தமிழர் கேட்பது சிங்களவரின் உரிமைகளையோ அன்றி தாயகத்தையோ அல்ல தமது சுதந்திரத்தையே கேட்கின்றனர். இதில் பங்கு போடுவதற்கோ அன்றிப் பேரம்பேசுவதற்கோ எதுவும் இருப்பதாக இல்லை.

இவை ஒருபுறம் இருக்க, கடந்த காலத்தில் விட்டுக்கொடுப்பிற்குத் தயாராக இருந்த தமிழ்த் தலைவர்களுக்கு சிங்கள அரசியல்வாதிகள் எதை வழங்கி விட்டார்கள்? தனிநாடு என்ற கோரிக்கையில் இருந்து சமஷ்டி என்றும், பின் மாவட்ட சபை என்றும் இறங்கி வந்தவர்களுக்கு சிங்கள...

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் 81மணி நேர உண்ணாவிரதமும்

காவிரிச் செல்வி நாட்டிய நாடகம், மதுரையில் 1981 ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் போது மேடையேற்றப்பட்டது. ஜெயலலிதாவின் இந்நாட்டிய நாடகத்தை அப்போதைய தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனும் பார்த்து மகிழ்ந்தார். இதன் மூலம் எம்.ஜி. ஆருக்கும் ஜெயலலிதாவுக்குமான ஊடல் காலம் முடிவுக்கு வர, மீண்டும் அவர்கள் நெருக்கமாயினர். அதாவது ஜெயலலிதா தமிழக அரசியல் அரங்கில் அறிமுகமாவதற்கு ''காவிரிச் செல்வி'' நாட்டிய நாடகம் கால்கோளாக அமைந்தது. இது பழைய கதை.

இப்போது காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையை முன்வைத்து அண்மையில் 81 மணி நேர உண்ணாவிரதத்தை சென்னையில் மெரினா கடற்கரையிலுள்ள எம். ஜி. ஆர். சமாதியருகே நடத்தியதன் மூலம் தமிழக முதல்வர் ஜெயலலிதா சரிந்து கொண்டிருக்கும் தமதுசெல்வாக்கை தூக்கி நிறுத்த முயற்சி எடுததுள்ளார். எண்பத்தொரு மணி நேரம் நீடித்த இந் நாடகத்தின் காட்சிகள் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இருந்தன. ஆனால் நாடகம் முடிவுக்கு வந்த போது காவிரியில் தண்ணீர் மட்டும் வரவில்லை என்பது வேறு கதை.

### உண்ணாவிரதம் இருக்க ஏன் முடிவு செய்தார்?

கடந்த சில மாதங்களாக ஏற்பட்டிருந்த அரசியல் சூழ்நிலைகள் ஜெயலலிதாவிற்கு அவரது உட்கட்சி எதிரிகளுக்கு உற்சாகத்தை ஊட்டி அவருக்கு சங்கடங்களை தோற்றுவித்தது. ஒருபுறம் கட்சிக்குள் அவரது செல்வாக்கு சரிந்து கொண்டிருந்தது. மறு புறத்தில் சுப்பிரமணியம் சுவாமி சுமத்தி வரும் ஊழல் குற்றச்சாட்டுக்களாலும், திறமையற்ற நிர்வாகத்தாலும், அதிகார துஷ்பிரயோகங்களாலும் அமைச்சர் முதல் அதிகாரிகள் வரை, குழம்பிப்போயிருந்தனர். அத்துடன் கட்சியின் தொண்டர்களுக்கும் அடுத்த இலக்கை காட்ட முடியாதவராக இருந்த ஜெயலலிதா, கட்சியையும் முழுமையாகத் தன் பிடிக்குள் வைத்துக் கொள்வதில் சிரமங்களையே எதிர்நோக்க வேண்டியிருந்தது.

மேலும் காங்கிரஸ் கட்சியுடன் மோதல் போக்கைத் தீவிரமாக்கிய பின்பு கட்சியினரைக் காங்கிரசின் வலைக்குள் விழ விடாமல் காக்க தனது பிம்பத்தை உயர்த்திக்கொள்ள வேண்டிய தேவை ஜெயலலிதாவிற்கு ஏற்பட்டிருந்தது.

இத்துடன் காவிரி நீரைப் பெறுவதில் தமிழக அரசு மெத்தனப் போக்கைக் கடைப் பிடிப்பதாகவும் - காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமுல்படுத்தக்கோருவதில் தமிழக அரசு தீவிரமாக இல்லை எனவும் குற்றம் சாட்டி தி.மு.க. தலைவரும், முன்னாள் முதல்வருமான கருணாநிதி உண்ணாவிரதம் இருப்பது பற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்தார். இந்தச் செய்தி ஜெயலலிதாவின் போயஸ் தோட்டத்துக்கு எட்டியது. அதன் உடனடி விளைவுதான் ஜெயலலிதாவின் திடீர் உண்ணாவிரதம் ஆகும்.

### உண்ணாவிரதத்தின் ஆரம்பம்

இந்தநிலையில்தான் கடந்த 18-07-93 அன்று காலையில் சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு போயஸ் தோட்டத்திலிருந்து திடீர் அழைப்பு வந்தது. தொலைபேசி மூலமாக விடுக்கப்பட்ட இந்த அழைப்பு ''அம்மா அவசரமாக, அறிவிப்பு ஒன்றை விடுகின்றார். எல்லோரும் மெரினாவில் உள்ள எம். ஜி. ஆர். சமாதிக்கருகே கூடுங்கள்'' என்று மட்டுமே தெரிவித்திருந்தது எல்லோரும் அங்கு ஓடிப்போயினர். காலை 9.15 மணியளவில் எம் ஜி ஆர் சமாதியருகே 'மலர்வளையம். வைத்து அஞ்சலி செய்த பின்னர் ஜெயலலிதா உண்ணாவிரதம் பற்றிய தனது அறிவிப்பை வெளியிட்டார். அப்போதுதான் கட்சித் தொண்டர்களும் ஏன் பல அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும்கூட ஜெயலலிதாவின் அறிவிப்பு பற்றி தெரிந்து கொண்டனர். பலரும் 'நானும்கூட உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன்' என்று கிளம்பினர். ஆனால் அவர்களுக்கெல்லாம் அனுமதிமறுத்த முதல்வர் ஜெயலலிதா தான் மட்டுமே உண்ணாவிரதம் இருக்க முடிவு எடுத்தார். அமைச்சர்கள் பலரும் 'பொறுப்புணர்ச்சியோடு' முதல்வரைச் சுற்றி நின்று கொண்டனர். அதிகாரிகள் திடீர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மேடை உடனே தயாரானது போயஸ் தோட்டத்திலிருந்த கட்டில் எம். ஜி. ஆர் சமாதியருகே கொண்டு வரப்பட்டது. பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன எம்.ஜிஆரின் 'சமாதியைச் சுற்றி போடப்பட்டிருந்த வேலிச் சுவர்கள் அதற்குள் இடித்து வீழ்த்தப்பட்டுவிட்டன.

இரண்டாண்டுக்கு மேலாக 'கோமா' நிலையிலிருந்த காவிரிப் பிரச்சினை மீண்டும் உயிர் பெற்றது. காவிரித் தண்ணீர் கேட்டு தாய் தவமிருக்கத் தொடங்கிவிட்டார் என்ற செய்தி தமிழகம் எங்கும் பரவியதும் ஒருவித ஸ்தம்பித நிலை ஏற்பட்டது. கடைகள் பூட்டப்பட்டன பேருந்துகள் இடைமறிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. புகையிரதங்கள் நிறுத்தப்பட்டன. ஆங்காங்கே குண்டர்களின் சந்தர்ப்பவாத கலாட்டாக்கள், ஆளும் கட்சியினரும், காவல்துறையினரும் கூட கைகட்டி வேடிக்கை பார்க்க ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் 'பரபரப்பை ஏற்படுத்தியது.

### ஆளுநர் திரும்பினார்

முதல்வரின் இந்த அதிரடி நடவடிக்கை பற்றி அறிந்து கொண்ட ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி தமது பாண்டிச்சேரி மாநில சுற்றுப் பயணத்தை இடை நடுவில் கைவிட்டு அவசரம் அவசரமாக சென்னை திரும்பினார். என்னென்னவோ கூறினார். எதுவும் எடுபட்டதாக இல்லை. பிரதமருக்கும் அறிவிக்கப்பட்டது. அவரும் அக்கறை எடுத்துக் கொண்டதாக உடன்தெரியவரவில்லை. இந்த நிலையில்தான் பிரதமர் அல்லது உயர்மட்ட அமைச்சர்கள் யாரும் இதுபற்றி என்னுடன் பேசாமல் உண்ணாவிரதத்தை நிறுத்தப் போவதில்லை என்று ஜெயலலிதா சூளுரைத்தார். எண்பத்தொரு மணி நேரம் நீடித்த ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டம் மத்திய அமைச்சர் வி. சி சுக்லாவின் வருகையோடு முடிவுக்கு வந்தது காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பு அமுலாக்கப்படுவதை கண்காணிப்பதற்காக இரு வெவ்வேறு குழுக்கள் அமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தவிர மத்திய அமைச்சரால் வேறு எதுவும் கூறிவிட முடியவில்லை. இதற்கு கர்நாடக அரசின் விடாப்பிடியான போக்கு மட்டுமன்றி மத்தியில் அரசின் தள்ளாட்டமும் ஒரு காரணம் என்பதை அடுத்து வந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டின. கோடி ரூபா ஊழல் பற்றிய புகாரில் சிக்கிக் கிடக்கும் நரசிம்மராவ் அரசு நித்தியகண்டமும் பூரண ஆயுசுமாக காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் காவிரி போன்ற சிக்கலான பிரச்சினைகளில் தலையிட்டு செல்வாக்கு செலுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை என்ற நிலையில் உண்ணாவிரதத்தைக் கைவிட சாட்டுத் தேடிக் கொண்ட ஜெயலலிதாவும், வி.சி சுக்லாவின் விஜயத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

இதனால் 21 ஆம் திகதி மாலை 5-30 மணியளவில் மத்திய அமைச்சர் வி. சி. சுக்லா முன்னிலையில் ஆளுநர் சென்னாரெட்டி வழங்கிய பழரசத்தைப்பருகி ஜெயலலிதா தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

### உண்ணாவிரதம் வெற்றியா? தோல்வியா?

மத்திய அரசு இவ்விவகாரத்தில் தலையிட வேண்டும் என்று கோரியே உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. மத்திய அமைச்சர் சென்னை வரை வந்து பேச்சு நடத்தியிருப்பதால் இது வெற்றியே ஆகும் என்று அ.இ.அ.தி.மு.க சப்பைக் கட்டலாம். காவிரியில் தண்ணீர் வரும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக வெளியிட்ட அறிவிப்பு என்னாயிற்று? காவிரியில் தண்ணீர் வந்ததா? விவசாயிகளின் கண்ணீர் ஓய்ந்ததா? என்று எதிர்க்கட்சிகள் கேள்விக்கணை தொடுத்து தோல்வியே என்று சாதிக்கலாம். மலிவான அரசியல் விளம்பரம் தேட ஜெயலலிதா எடுத்த இந்த முயற்சியால் தமிழகத்தில் மட்டுமன்றி கர்நாடகத்திலும்பரபரப்பும், பதற்றமும், பீதியும் ஏற்பட்டதோடு ஒருவித ஸ்தம்பிதநிலையும் பெரும் சொத்து இழப்புகளும் ஏற்பட்டு இருப்பது மட்டும் நிச்சயமானது.

எனினும் ஜெயலலிதா உருவாக்கியிருக்கும் அனுதாப அலை தமிழகத்தில் நடைபெற இருக்கும் இடைத் தேர்தல் வரை நீடிக்குமானால் அ. இ. அ. தி. மு. க. வெற்றி பெறக் கூடும். தனது பிரம்மாஸ்திரத்தை ஜெயலலிதாவே பயன்படுத்திக் கொண்டுவிட்டதால் கருணாநிதி திகைத்துப் போயிருப்பதும், ஜெயலலிதாவின் எதிர்பாரா அதிரடியால் அவரது கட்சியினர் வியப்படைந்து போயிருப்பதும் மட்டும் காவிரியின் கீழ் பாசனம் பெறும் விவசாயிகளுக்கு நன்மை எதையும் தந்துவிடப் போவதில்லை.

### மட்டக்களப்பு

## விமானநிலைய விஸ்தரிப்பு நட்டஈடு இதுவரை இல்லை

## பாகிஸ்தானுக்கு எவ்-15 வழங்க முடியாது

### அமெரிக்கா தெரிவிப்பு

பிரஸ்லர் திருத்தம் அமுலில் இருக்கும்வரை பாகிஸ்தான் கொள்வனவு செய்துள்ள எவ்-15 ரக விமானங்கள் எதையும் விற்பனை செய்ய இயலாது ...பின் துணைத்தலைவர் மேஜர் ஜெனரல் ஜோசப் ஹோர்ட் தலைமையில், இஸ்லாமாபாத் சென்றிருந்த உயர் அதிகார அமெரிக்க பிரதிநிதிகள் குழு...

தமிழரின் ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணை மீட்பதற்கும், இழந்த உரிமைகளைப் பெறுவதற்கும் ஆகும். இதில்தான் தமிழரின் சுதந்திரமும், பாதுகாப்பும் தங்கியுள்ளது. இதில் எதை விட்டுக் கொடுப்பது? தமிழரின் தாயகத்தையா? அன்றிப் பாதுகாப்பையா? அல்லது சுதந்திரமான வாழ்வையா? இதில் எதை விட்டுக் கொடுப்பினும் அது தமிழரின் அடிமைச் சாசனமாகவே இருக்கும்.

மேலும் தமிழர் கேட்பது சிங்களவரின் உரிமைகளையோ அன்றி தாயகத்தையோ அல்ல தமது சுதந்திரத்தையே கேட்கின்றனர். இதில் பங்கு போடுவதற்கோ அன்றிப் பேரம்பேசுவதற்கோ எதுவும் இருப்பதாக இல்லை.

இவை ஒருபுறம் இருக்க, கடந்த காலத்தில் விட்டுக்கொடுப்பிற்குத் தயாராக இருந்த தமிழ்த் தலைவர்களுக்கு சிங்கள அரசியல்வாதிகள் எதை வழங்கி விட்டார்கள்? தனிநாடு என்ற கோரிக்கையில் இருந்து சமஷ்டி என்றும், பின் மாவட்ட சபை என்றும் இறங்கி வந்தவர்களுக்கு சிங்கள அரசாங்கம் கொடுத்தது என்ன? சிங்கள அரசியற் தலைவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட்டார்களா?

இதேபோன்று தற்பொழுது தமிழர் தாயகத்தைக் காட்டிக் கொடுக்கவும், தரும் அற்ப சொற்ப சலுகைகளைக் கொண்டும் திருப்திப்படக் காத்திருக்கும் தமிழ்க் குழுக்களுக்குச் சிங்களப் பேரினவாதம் எதைக் கொடுதது விட்டது? இவர்களின் ஒத்துழைப்புடன் தமிழர் தாயகத்தைத் துண்டாடி கிழக்கைக் கபளீகரம் செய்ய முற்பட்டு நிற்கின்றது. இதனால் அடிமைச் சேவகம் செய்யத தயாரான தமிழ்க் குழுக்கள் இன்று செய்வதறியாது திகைத்துப் போயுள்ளன.

உண்மையிலேயே அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பியிருப்பின் சர்வகட்சி மாநாடு என்றும், தெரிவுக்குழு என்றும் கூட்டிய அரசாங்கம் அங்கு தமது ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை விளக்கியிருக்க வேண்டும் விடுதலைப்புலிகள் சமஷ்டி அமைப்பைப் பரிசீலிக்கத் தயார் எனத் தமது நிலைப்பாட்டை அறிவித்தபோது அரசாங்கம் அது குறித்தாவது முன்னேற்றகரமான நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும்.

இவை யாவற்றையும் விடுத்து, விடுதலைப் புலிகளின் விடாப்பிடித்தனமான போக்கே சமாதானத் தீர்விற்கு முட்டுக்கட்டையாகவுள்ளது எனத் தெரிவிப்பது ஒரு போலியான குற்றச்சாட்டாகும். மாறாக சிங்களப் பேரினவாதமும், சிங்கள அரசியற் கட்சிகளின் பதவிப் போட்டியுமே இனப்பிரச்சினைத் தீர்விற்கு முட்டுக்கட்டையாகவுள்ளன. அத்தோடு, பிரச்சினை மேலும் மேலும் சிக்கலடையவும் காரணமாகவுள்ளன.

## இம்மாத இறுதியில் மூன்று பரீட்சைகள்

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் இம்மாதம் இறுதிப் பகுதியில் மூன்று பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து அனுப்பிவைத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை இம்மாதம் 25ஆம் திகதி நடைபெறும் என்றும் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 25ஆம் திகதியளவில் நடைபெறும் என்றும், எழுதுவினைஞர் அதிவிசேட தரத்திற்கு பதவி உயர்வு செய்வதற்கான பரீட்சை இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார். [தி],[பா]

சாட்டுக்களாலும், திறமையற்ற நிர்வாகத்தாலும், அதிகார துஷ்பிரயோகங்களாலும் அமைச்சர் முதல் அதிகாரிகள் வரை, குழம்பிப்போயிருந்தனர். அத்துடன் கட்சியின் தொண்டர்களுக்கும் அடுத்த இலக்கை காட்ட முடியாதவராக இருந்த ஜெயலலிதா, கட்சியையும் முழுமையாகத் தன் பிடிக்குள் வைத்துக்

தெரிவித்திருந்தது எல்லோரும் அங்கு ஓடிப்போயினர். காலை 9.15 மணியளவில் எம் ஜி ஆர் சமாதியருகே 'மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்த பின்னர் ஜெயலலிதா உண்ணாவிரதம் பற்றிய தனது அறிவிப்பை வெளியிட்டார். அப்போதுதான் கட்சித் தொண்டர்களும் ஏன் பல அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பி

விரதம் 'பரபரப்பை ஏற்படுத்தியது.

### ஆளுநர் திருமபினார்

முதல்வரின் இந்த அதிரடி நடவடிக்கை பற்றி அறிந்து கொண்ட ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி தமது பாண்டிச்சேரி மாநில சுற்றுப் பயணத்தை இடை நடுவில் கைவிட்டு

உண்ணாவிரதத்தைக் கைவிட சாட்டுத் தேடிக் கொண்ட ஜெயலலிதாவும், வி.சி சுக்ளாவின் விஜயத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

இதனால் 21 ஆம் திகதி மாலை 5-30 மணியளவில் மத்திய அமைச்சர் வி. சி. சுக்ளா முன்னிலையில் ஆளுநர் சென்னாரெட்டி வழங்கிய பழரசத்தைப்பருகி ஜெயலலிதா

பெறக் கூடும். தனது பிரம்மாஸ்திரத்தைஜெயலலிதாவே பயன்படுத்திக் கொண்டுவிட்டதால் கருணாநிதி திகைத்துப் போயிருப்பதும், ஜெயலலிதாவின் எதிர்பாரா அதிரடியால் அவரது கட்சியினர் வியப்படைந்து போயிருப்பதும் மட்டும் காவிரியின் கீழ் பாசனம் பெறும் விவசாயிகளுக்கு நன்மை எதையும் தந்துவிடப் போவதில்லை.

மட்டக்களப்பு

# விமானநிலைய விஸ்தரிப்பு நட்டஈடு இதுவரை இல்லை

## பாதிக்கப்பட்டோர் அங்கலாய்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பினால் பாதிக்கப்பட்ட 385 தமிழ்க் குடும்பங்களுக்குமான நட்ட ஈடுகள் மட்டக்களப்பு ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவையின் போதாவது கிடைக்கலாம் என்று எதிர்பார்த்த பலரும் ஏமாற்றத்திற்கு உள்ளானார்கள்.

அவசர காலச் சட்டத்தின் கீழ் 1985ஆம் ஆண்டில் குறுகிய கால அறிவித்தலுடன் 385 தமிழ்க் குடும்பங்களும் மட்டக்களப்பு விமான நிலைய சுற்றாடலில் இருந்து வெளியேற்றப்பட்டது தெரிந்ததே

மாவட்டக் காணி அலுவலகம் உரிய சட்டப்பிரமாணங்களின் கீழ் காணி சுவீகரிக்காமையினால் காணி அலுவலகத்திற்கு கடந்த ஒன்பது ஆண்டுகளாக அலைந்த இம் மக்களுக்கு மட்டக்களப்பில் நடைபெற்ற காணி அமைச்சின் இடம்பெயர் சேவையின் போது காணி அமைச்சர் காமினி அத்துகோறளை ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவைக்கு முன்பாக இழப்பீடுகள் வழங்கப்படும் என்று நம்பிக்கை ஊட்டியிருந்தார்.

பாதிக்கப்பட்டவர்களும் ஜூலைக்கு முன் இழப்பீடுகள் கிடைக்குமென்றே எதிர்பார்த்து, அதனால் இடம்பெயர் சேவைக்கும் கூட சமூகமளித்து இருந்தனர். ஆனால் எந்தவித இழப்பீடுகளும் கிடைக்கவில்லை.

## ஐ. ஐ. தே. மு. அரசுடன் இணைவது எவ்வகையிலும் பாதிக்காது

–தொண்டமான்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் இணையப்போவதாக வெளிவரும் செய்திகள் குறித்து தான் எந்தவகையிலும் கவலைப்படவில்லை என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார். அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் இது முழுக்க முழுக்க அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகும் என்றும் தெரிவித்தார் அத்துடன் இ. தொ. கா தோட்டப்புற மக்களின் நலனில் இன்றுநேற்றல்ல கடந்த ஐம்பது ஆண்டு காலமாகவே அக்கறை காட்டிவருகின்றது. இ. தொ. கா தனது வளர்ச்சிக்கு மற்றவர்களின் பலவீனங்களை நம்பியிருக்கவில்லை. ஐ ஐ தே மு. அரசுடன் இணைந்தாலும் சரி இணையாவிட்டாலும் சரி அது இ.தொ. காவைப் பாதிக்கப்போவது இல்லை என்றும் தெரிவித்தார்.

சந்திரசேகரன்

## மாகாணசபைக்கூட்டத்திற்கு பாதுகாப்புடன் செல்லலாம்?

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், மத்திய மாகாண சபையின் உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் பாதுகாப்புடன் சென்று சத்தியப்பிரமாணம் செய்வதிலும், கூட்டங்களில் கலந்துகொள்வதிலும் தமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயர் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

கூட்டுப்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் இருந்ததாகக் கூறப்படும் வரதனுக்கு புகலிடம் வழங்கினார் என்ற சந்தேகத்தின் பெயரில்சந்திரசேகரனும், மலையகமக்கள் முன்னணியின் மற்றும் சில தலைவர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதேவேளை சந்திரசேகரன் வழக்கை விசாரித்த நீதிபதி ரி.பி. வீரசூரியா பாணந்துறைக்கு இடம் மாற்றம் பெற்றுள்ளமையால் இவ்வழக்கும் பாணந்துறைக்கு இடம் மாற்றப்படவுள்ளது என்றும், இவ்வழக்கில் ஆஜராகும் அரச தரப்பு சட்டவாதி விஜிதமல்லகொட வெளிநாடு போயிருப்பதால் முன்பு அறிவித்தபடி இம்மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் இவ்வழக்கு விசாரணை நடைபெறுமா என்பது பற்றி தெளிவாகத் தெரியவரவில்லை.

இருந்தும் பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் உத்தரவையடுத்து தாம் மத்திய மாகாணசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யும்படி திரு. சந்திரசேகரன் கோருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வகுப்புகள் ஆரம்பமாகும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கரவெட்டிப்பிரிவு கப்புதூ கிராமத்தில் ஆரம்ப சுகாதார வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளது.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளையின் அனுசரணையுடன் இவ்வகுப்புகள் நடைபெறும். அத்துடன் கப்புதூ கிராமத்தில் தையல் பயிற்சி வகுப்பு ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

## பாகிஸ்தானுக்கு எவ்-15 வழங்க முடியாது

அமெரிக்கா தெரிவிப்பு

பிரஸ்லர் திருத்தம் அமுலில் இருக்கும்வரை பாகிஸ்தான் கொள்வனவு செய்துள்ள எவ்-15 ரக விமானங்கள் எதையும் விற்பனை செய்ய இயலாது என்று அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அமெரிக்க விமானப்படையின் துணைத்தலைவர் மேஜர் ஜெனரல் ஜோசப் ஹேர்ட் தலைமையில், இஸ்லாமாபாத் சென்றிருந்த உயர் அதிகார அமெரிக்க பிரதிநிதிகள் குழுவினர், பாகிஸ்தான் அதிகாரிகளிடம் இதனைத் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

## நிதிநெருக்கடியில் ஐ.நா.; பொதுச்செயலாளர் கடிதம்

[ஐ நா]

ஐக்கிய நாடுகள் சபை மிக மோசமான நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது. இரண்டு பில்லியன்களுக்கும் மேலான ஒரு தொகையை அது கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது. இன்னும் ஒரு மாதத்திற்குத் தேவையான பணம் மட்டுமே கையிருப்பில்உள்ளது என்று ஐ. நா. சபையின் பொதுச்செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலி பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களுக்கும், வெளிவிவகார அமைச்சர்களுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த அவசர கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிடுகையில் ஐ.நாவிடம் தற்போது கையிருப்பிலுள்ள பணம் முப்பதெட்டு கோடி டாலர் மட்டுமே ஆகும் என்றும் ஐ.நா.வின் மாதாந்தச் செலவு மட்டும் 31 கோடி டாலர் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை நீடிக்குமானால் புதிய பணி எதற்கும் நிதி வழங்க முடியாது என்றும் தற்போது மேற்கொள்ளப்படும் பணிகளும் இடைநிறுத்தப்படலாம் என்றும் தெரிவித்தார்.

இக் கடிதத்தின் பிரதிகள் பணம் செலுத்தாத நூற்றியைம்பது நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் கூட அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் ஆணையாளரின் உத்தரவுக்கு எதிராக மனு

(டில்லி)

தேர்தல்களைத் தள்ளி வைத்து தலைமைத் தேர்தல் ஆணையாளர் விடுத்த உத்தரவின் மீது இடைக்காலத் தடைவிதிக்குமாறு கோரும் மனுவை உச்சநீதி மன்றத்திடம் மத்திய அரசு தாக்கல் செய்யவுள்ளது.

இது தொடர்பாக நேற்று மக்களவையில், பாராளுமன்ற விவகார அமைச்சர் வி. சி. சுக்ளா அறிக்கையொன்றை வெளியிட்டார். அதில் மாநில அரசின் விருப்பத்திற்கு மாறாக தேர்தலின் போது மத்திய படைகளை ஈடுபடுத்தும்படி தேர்தல் ஆணையகம் மத்திய அரசுக்கு உத்தரவிட முடியாது என்றும், பணியில் அமர்த்தப்படும் தேர்தல் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையகத்திற்கு கிடையாது என்றும், தலைமை வழக்கறிஞர் மிலான் பானர்ஜி அளித்த விளக்கத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

### மத்திய அரசு பொறுப்பேற்கும்

சென்னை அடையாற்றில் செயற்படும் கலாஷேத்ரா நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தையும் மத்திய அரசு பொறுப்பேற்கவுள்ளது, இதற்கான முழு நிதிப்பொறுப்பையும் மத்திய அரசு ஏற்கவுள்ளது. கலாஷேத்ரா நிறுவனம் நாட்டின் கலாசாரப் பாரம்பரியங்களை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றுவதால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Nallur Branch Library

பருத்தித்துறை துறைமுகத்தில்

## ஐந்து இழுவைப்படகுகள் பழுதடைந்த நிலையில்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு பொருள்களுடன் வந்துசேரும் கப்பல்களிலிருந்து சரக்கு பொருள்களை ஏற்றிவரும் ஐந்து இழுவைப்படகுகளும் பழுதடைந்த நிலையில் அடிக்கடி திருத்தப்பட்டே பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இப்படகுகள் நாளொன்றிற்கு சுமார் 700 மெற்றிக்தொன் எடையுள்ள பொருள்களை ஏற்றிவருகின்றன. மேலதிகமான எடையில் பொருள்களை ஏற்றிவர முடியவில்லை என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிலங்கா அரசாங்கத்திற்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டபோதிலும் அரசு இதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்று கூறப்பட்டது.

(தி) (பா)

## உடுகம்பொலவுக்கு கார் ரூபா 20 ஆயிரம் சம்பளம்

[கொழும்பு]

எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியே முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொலவை துறைமுக அதிகார சபையின் உபதலைவராக நான் நியமித்தேன் என துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

துறைமுக அதிகார சபையின் உப தலைவர் என்ற முறையில் உடுகம்பொலவிற்கு 11,500 ரூபா மாதச்சம்பளமும் 1,200 ரூபா விசேட அலவன்சும், 7,590 ரூபா எரிபொருள் அலவன்சும் வழங்கப்படும் என்றும் இதற்கு மேலாக அவருக்கு உத்தியோகபூர்வமான கார் ஒன்றும் வழங்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

கைதடி கிழக்கு சன சமூக நிலைய பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

நிலையத் தலைவர் தலைமையில் நிலையத்திற்கு அருகில் நடைபெறும்.

(தி)

## 1-வதுபிறந்ததின வாழ்த்து



### செல்வி நிவேதிதா (நிக்சி)
### 07 - 08 - 1993

செல்வநாயகம் ஜெயராணி தம்பதிகளின் அருந்தவப்

# 8½ கோடி கண்ணிவெடிகள் உலக நாடுகளில் புதைப்பு

(வாஷிங்டன்)

உலகெங்கும் 62 நாடுகளில் 8 கோடியே 50 லட்சத்திற்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் பரவிக்கிடப்பதாக அமெரிக்க வெளிநாட்டமைச்சு மதிப்பிட்டுள்ளது உலகில் அதிக கண்ணிவெடிகள் ஆபிரிக்காவிலேயே புதைக்கப்பட்டுள்ளன. ஆபிரிக்காவிலுள்ள 18 நாடுகளில் ஒருகோடியே 80 லட்சம் முதல் மூன்று கோடி வரையிலான கண்ணிவெடிகள் பரவியுள்ளன.

மத்திய கிழக்கில் ஒரு கோடியே 70 லட்சம் முதல் 2 கோடியே 40 லட்சம் கண்ணிவெடிகள் பெரும்பாலும் இஸ்ரேலுடனான இருபக்க எல்லை நெடுகிலும் காணப்படுகிறது. கிழக்காசியாவில் 8 நாடுகளில் ஒரு கோடியே 30 லட்சம் முதல் இரண்டு கோடியே 30 லட்சம் கண்ணிவெடிகள் உள்ளன. ஐரோப்பாவில் 30லட்சம் முதல் 70 லட்சம் வரையில் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட கண்ணிகள் குரோஷியா, சேர்பியா, பொஸ்னியா ஆகிய நாடுகளில் புதைக்கப்பட்டுள்ளன.

லத்தீன் அமெரிக்காவில் 3 லட்சம் முதல் 10 லட்சம் வரையிலான கண்ணிவெடிகள் பெரும்பாலும் நிக்கரகுவா எல்சல்வடோர், கொண்டூராஸ், கோஸ்டரீகா, குவாட்டமாலா ஆகிய நாடுகளில் உள்ளன.

## மாதாந்த உதவிப்பணம் பலருக்கு வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொதுமக்களுக்கான மாதாந்த தருமப்பணம் நூற்றுக்கணக்கானோருக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை யாழ். மாவட்டத்திலுள்ள 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் மாதாந்தம் வழங்கும் மேற்படி தருமப் பணத்தில் பெருந்தொகையை ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும் வெட்டியதைத் தொடர்ந்து இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடைய வறிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பணமும் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## யாழ். இலக்கிய வட்டத்தின் சாகித்திய விருது விபரம்

யாழ். இலக்கிய வட்டத்தின் இலக்கியப் பேரவை கடந்த ஐந்து ஆண்டுகளாக நடாத்தி வரும் தமிழ் எழுத்தாளர்களுக்கான சாகித்திய விருது வழங்கும்நிகழ்வுக்கு91/92-ம் ஆண்டுகளில் நாடுமுழுவதும் வெளியிடப்பட்ட நூல்களில், தேர்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நூல்களில் பரிசில்களும் பாராட்டும் பெறும் படைப்பாளிகளின் பெயர் விபரங்களை வெளியிடும் விழா செப்ரெம்பர் மாத முற்பகுதியில் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

இலக்கிய ஆய்வு - நாட்டார் இசை இயல்பும், பண்பாடும்- கலாநிதி இ. பாலசுந்தரம், நாவல்-அக்கினி-செங்கை ஆழியான். சிறுகதைத் தொகுதி- உலா- க. சட்டநாதன், கவிதைத் தொகுப்பு - நெருப்பு மழை - மு. வே. யோ. வாஞ்சிநாதன், சிறுவர் இலக்கியம்- சண்டியன் ஓநாய்- வ இராசையா, சமயம்- பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்- கலாநிதி தா. ஞானகுமாரன், நாடகம்-மயில்- கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, அறிவியல் - தேடலும் பதித்தலும்- அனு.வை. நாகராஜன், பாராட்டுச் சான்றிதழ்கள்- இலக்கிய ஆய்வு - புறப்பொருள் வெண்பா மாலை புலவர் சிவபாதசுந்தரனார், நாவல்-விண்ணில் அல்ல விடிவெள்ளி-தாமரைச் செல்வி, மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், கவிதை-சந்தண மேடை-என். சண்முகலிங்கன், சிறுவர் இலக்கியம்- கொஞ்சும் தமிழ்-அம்பி

மேற்படி முடிவுகள் அறிஞர் குழுவினரால் தேர்வுக்காக தெரிவு செய்யப்பட்டவையாகும்

### கப்பலில்

போன்ற இடையூறுகள் மற்றும் வேறு பிரச்சினைகளினால் தீர்மானிக்கப்பட்ட பொருள்களின் அளவைவிட குறைவாகவே இங்கு வந்து சேருகிறது.

கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்துசேரும்போது, கப்பல் கப்டனால் எடுத்துவரப்படும் பட்டியல் யாழ். செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்த பொருள்களின் அளவிற்கும் துறைமுகத்தில் கப்பல் கப்டனால் கையளிக்கப்படும் பொருள்களின் அளவிற்குமிடையே வித்தியாசம் காணப்படுவதால் மக்களுக்கு இது விடயத்தில் குழப்பம் ஏற்படுகிறது. (தி), (பா)

எழுதுவினைஞர்

## சாளரம் கலந்துரையாடல்

"நாளை ஞாயிறு காலை 9மணிக்கு கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தில் வலி-வடக்குக் கிழக்குப் பிரதேசப் பரியோவான் முதலுதவிப் படையினரின் ஆதரவில் சாளரம் இதழ் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு இச்சங்கத்தின்

## குமாரி இன்று வரும்

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'குமாரி' கப்பல் அத்தியாவசியப் பொருள்களுடன் இன்று காலை பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடையும்.

இக் கப்பலில் யாழ். சமநல சேவை திணைக்களத்திற்கு துவிச்சக்கர வண்டிகளும் எடுத்துவரப்படுகின்றன. கொழும்புக்குச் சென்றிருந்த யாழ். திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் இக் கப்பல் மூலம் வருகிறார்.

அதே சமயம் 'ஐலண்ட் வைற்' என்ற புதிய கப்பலில் 1000 பரல் மண்ணெண்ணெய் நாளை பருத்தித் துறைக்கு வந்துசேரும். காங்கேசன்துறையிலிருந்து மண்ணெண்ணெய் பரல்கள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இன்று மூன்று கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்படவுள்ளன. (யோ)

## கலை நிகழ்ச்சி

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 29-05-1947



ஆண்டவன் அழைப்பில் 09-07-1993

### சுப்பிரமணியம் நாகராசா [யோசப்]

கண்கண்ட எங்கள் தெய்வமே!
பண்பட்ட உங்கள் பாசத்தை சொல்வோமா
புண்பட்ட மனதிற்கு நீர் அளித்த ஆறுதலைச் சொல்வோமா
விண்சென்ற உம்மை கணப்பொழுதும் மறப்போமா
உங்கள் பிரிவால் சிந்தும் கண்ணீரை
காணிக்கையாக்கி உங்கள் ஆன்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
தாய், உற்றார், உறவினர்.
நண்பர்கள்.

19/6, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(5635)

## 4-ம் ஆண்டு வீர அஞ்சலி

அன்னை மடியில்: 04 - 05 - 1974




மண்ணின் மடியில்: 07 - 08 - 1989

### கப்டன் ஜேம்ஸ்

சிவசுப்பிரமணியம் மணிவர்மன்

(சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை)
இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் அலம்பிலில்வீரச்சாவடைந்தார்.

புயலாக நீ நின்று போராடினாய்—வீரப்
புலியாக அந்நியப் படையை எதிர் கொண்டாய்
தாயக விடிவிற்காய் தன்னுயிரைக் கொடுத்தவனே
விடிந்துவிடும் தமிழீழம் வெகுதூரத்தில் இல்லை.



## செல்வி. நிவேதிதா (நிக்சி)
## 07 - 08 - 1993

செல்வநாயகம் ஜெயராணி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி நிவேதிதா [நிக்சி] தனது 1ஆவது பிறந்த தினத்தை அல்வாய் சக்கோட்டையிலுள்ள தனது இல்லத்தில் 07-08-93 இன்று விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அ்புப் புலி அத்தான், பொலிஸ் மாமா, சுகிர்தா அன்ரி, ராஜி அன்ரி, அப்பம்மா, அம்மம்மா, அத்தைமார், மாமன்மார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், ரீச்சர் அத்தை, பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தினர், மோகன் மாமா ஆகியோர் இறையேசுவின் அருளும் ஆசீரும் பெற பல்லாண்டு வாழ்த்துகின்றனர்.

(5636)

வடபிராந்திய
### வர்த்தகர் சங்கங்களின் சமாசம்
கலந்துரையாடல் ஒத்திவைப்பு

07-08-1993 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கோண்டாவில் பணிமனையில் நடைபெறவிருந்த வர்த்தக சங்கங்களுக்கான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

ஜெ. சந்திரகாந்தன்
செயலாளர்

(4096)

## அறிவித்தல்
வட இலங்கைச் சங்கீத சபை
### அறிமுறைத் தேர்வு - 1993

தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்ட மேற்படி தேர்வு 1993-09-04 (சனி), 1993-09-05 (ஞாயிறு) ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாடிகளுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட தேர்வு நிலையங்களில் 1993-05-15ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993-09-04ந் திகதி சனிக்கிழமையும், 1993-05-16-ந் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 1993-09-05-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும்,
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

(சி-7136)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 07-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

றும் வேறு பிரச்சினைகளினால் தீர்மானிக்கப்பட்ட பொருள்களின் அளவைவிட குறைவாகவே இங்கு வந்து சேருகிறது.

கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்துசேரும் போது, கப்பல் கப்டனால் எடுத்துவரப்படும் பட்டியல் யாழ். செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்த பொருள்களின் அளவிற்கும் துறைமுகத்தில் கப்பல் கப்டனால் கையளிக்கப்படும் பொருள்களின் அளவிற்குமிடையே வித்தியாசம் காணப்படுவதால் மக்களுக்கு இது விடயத்தில் குழப்பம் ஏற்படுகிறது. (தி), (பா)

எழுதுவினைஞர்

யிலும், பெற்ற புள்ளி அடிப்படையிலும் நியமனம் வழங்கப்படவுள்ளது. என்றும் யாழ். குடாநாட்டில் உள்ள எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்கள் அனைத்தும் பூரணமாக நிரப்பப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

[க], [சி]

ஜனாதிபதி

பதிக்கு எடுத்துக்கூறியுள்ளார்.

அத்துடன் குடாநாட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் குறித்தும் இத்தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டது குறித்தும் ஜனாதிபதியின் கவனத்துக்கு அரச அதிபர் கொண்டுவந்ததாகவும் கூறப்படுகிறது. [க]. [சி]

நாதன், கவிதை-சந்தனமேடை-என். சண்முகலிங்கன், சிறுவர் இலக்கியம்- கொஞ்சும் தமிழ்-அம்பி

மேற்படி முடிவுகள் அறிஞர் குழுவினரால் தேர்வுக்காக தெரிவு செய்யப்பட்டவையாகும்

### சாளரம்
### கலந்துரையாடல்

''நாளை ஞாயிறு காலை 9மணிக்கு கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தில் வலி-வடக்குக் கிழக்குப் பிரதேசப் பரியோவான் முதலுதவிப் படையினரின் ஆதரவில் சாளரம் இதழ் பற்றிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு இச்சங்கத்தின் எல்லைக்குள்ளான முதலுதவிப்படையினரின் ஆணையாளர் திரு. க. அருந்தவராஜா அவர்கள் தலைமை தாங்குவார்.''

காமினி

அனைத்து விடயங்களிலும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கூரே தேசிய அரசு எனும் பெயரை வைப்பதா? இல்லையா என்பதிலேயே இன்னும் இணக்கப்பாடு காணப்படவில்லை எனவும் இது தொடர்பான இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய அரசு அமைப்பது தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சு வார்த்தை இவ்வார இறுதியில் நடைபெறவுள்ளதாகவும் கூரே தெரிவித்துள்ளார்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 05-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10541

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
42-9326, 24-1040, 41-9663.

### 06-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10543

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
40-2249, 27-9489, 26-1689, 41-2651, 26-3812, 26-4610, 43-4065, 26-4727, 26-4510, 26-0786, 26-1495, 26 2585, 24-8631, 28-9560, 26-6382, 22-8835, 41-8292, 26-7286, 26-4526.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
28-2657, 43-4045.

இறங்குதுறையை வந்தடையும்.

இக் கப்பலில் யாழ். சமநல சேவை திணைக்களத்திற்கு துவிச்சக்கர வண்டிகளும் எடுத்துவரப்படுகின்றன. கொழும்புக்குச் சென்றிருந்த யாழ். திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் இக் கப்பல் மூலம் வருகிறார்.

அதே சமயம் 'ஐலண்ட் வைற்' என்ற புதிய கப்பலில் 1000 பரல் மண்ணெண்ணெய் நாளை பருத்தித்துறைக்கு வந்துசேரும். காங்கேசன்துறையிலிருந்து மண்ணெண்ணெய் பரல்கள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இன்று மூன்று கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்படவுள்ளன. (யோ)

### கலை நிகழ்ச்சி

யாழ். வர்த்தகச் சங்க வளர்ச்சிக்காக இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் நாதஸ்வர இசை, பரதநாட்டியம் என்பவற்றுடன், சாந்தன், ராஜன் குழுவினரின் இன்னிசை கானங்கள் இடம்பெறும்.

### தடை உத்தரவு நீக்கம்

[கொழும்பு]

சிறிநாத் லாலா குமாரசிங்க என்னும் சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் மீது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவுகளை ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க நீக்கியுள்ளார்.

இருதயத்தினுள்

கொழும்பு கொண்டுவரப்பட்டார். இருதயம் அவருக்கு வீங்கியிருந்தது. அறுவைச் சிகிச்சையின் போது இருதய நாளம் ஒன்றை கத்திரிக்கோலால் வெட்டியபின் மற்றுமோர் துண்டை கத்தியால் வெட்டினேன் அப்போது கத்திப்பிடி கழன்றிருப்பதை எனக்கு உதவிய டாக்டர் சுட்டிக் காட்டினார். பின்னர் கத்தியை காணாததால் இரண்டு நாட்களுக்குப்பின் நோயாளியை மீண்டும்அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாக்கினேன் அவ்வேளையில் நோயாளி காலமானார் என அந்த வைத்திய நிபுணர் தமது சாட்சியத்தில் கூறினார். மரணமடைந்தவரின் மனைவி செல்வநாதன் சரோஜாதேவி(24) என்பவரும் சாட்சியமளித்தார்.

இரண்டாவது அறுவைச் சிகிச்சையின் போது இருதயம் செயலிழந்ததால் மரணம் சம்பவித்தது என்றும் இது திடீர் விபத்துமரணம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

05 - 1974  08 - 1989

### கப்டன் ஜேம்ஸ்
சிவசுப்பிரமணியம் மணிவர்மன்

(சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை)
இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் அலம்பிலில்வீரச்சாவடைந்தார்.

புயலாக நீ நின்று போராடினாய்—வீரப்
புலியாக அந்நியப் படையை எதிர் கொண்டாய்
தாயக விடிவிற்காய் தன்னுயிரைக் கொடுத்தவனே
விடிந்துவிடும் தமிழீழம் வெகுதூரத்தில் இல்லை.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், உற்றார்,
உறவினர்கள்.

பருத்தித்துறை.

(5637)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி





காசிலிங்கம்
### சிவபாலன்
(மாம்பழம்)
(நாயன்மார்கட்டு, சனசமூக நிலைய உபதலைவர், தண்ணீர்ப் பந்தல்சபை உறுப்பினர்)

மலர்வு:
18-05-1963

செல்வரத்தினம்
### செல்வகுமார்
(ராசன்)
(தண்ணீர்ப் பந்தல் சபை பொருளாளர், நாயன்மார்கட்டு, சனசமூக நிலைய உறுப்பினர்

மலர்வு:
23-06-1966

உதிர்வு: 07-08-1990

(அத்தியடியில் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில்)

இன்று 6-30 மணியளவில் நாயன்மார்கட்டு, சனசமூக நிலையத்தில் மேற்படி இரு சமூகப் பணியாளர்களினது திருவுருவப் படங்களின் திறப்பு விழா நடைபெறும். இவ்விழாவில் 'வள்ளுவர் காட்டும் வாழ்க்கைத் தத்துவம்'' என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி கலாநிதி இ. சின்னத்தம்பி அவர்கள் உரையாற்றவுள்ளார். அனைவரும் வருக.

பெற்றோர், உறவினர், நண்பர்கள்,
தண்ணீர்ப் பந்தல் சபையினர்,
நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தினர்

(சி-7158)